Vision Initiative

A partnership promoting eye health and vision care

# கண் நலம் மற்றும் கண் பார்வைப் பராமரிப்பு: யாரால் உதவ இயலும்?

# Eye health and vision care: who can help

பல உடல்நலத் தொழிலர்களால் கண் பிரச்சினைகளை சமாளிக்க உதவ இயலும். உங்களுடைய கண்களைப் பற்றிய கவலைகள் ஏதும் உங்களுக்கிருந்தால் அவர்களுடன் பேசத் தயங்காதீர்கள்.

Many health professionals can help manage eye problems. Don't hesitate to talk to them if you have any concerns about your eyes.

## மருந்தாளர்கள் (Pharmacists)

கண் நலம் மற்றும் பார்வைப் பரமரிப்பைப் பற்றிய அறிவுரை மற்றும் தகவல்களை மருந்தாளர்களால் அளிக்க இயலும். மருந்துகள், மருந்துகளின் பக்க விளைவுகள் மற்றும் மருந்துகள் ஒன்றோடு ஒன்று எப்படி எதிர்வினையாற்றும் என்பதைப் பற்றிய அறிவுரைகள் இதில் உள்ளடங்கும். பரிந்துரை இல்லாமல் நேடியாக வாங்கும் மருந்துகள் மற்றும் பருவகால ஒவ்வாமைகள் போன்ற பொதுவான கண் பிரச்சினைகளுக்கான பரிந்துரைத் தெரிவுகள் ஆகியவற்றைப் பற்றியும் இவர்களால் தகவல்கள் அளிக்க இயலும்.

உங்களுடைய மருந்தாளரிடமிருந்து மருந்துகள், கண் சொட்டு மருந்துகள் அல்லது கண் கண்ணாடிகள் ஆகியவற்றை வாங்கும்போது, உங்களுக்குக் கண் பிரச்சினைகள் எதுவும் இருந்தால் அவற்றைப் பற்றி விளக்கிச் சொல்ல மறக்காதீர்கள். கீழே அட்டவணையிடப்பட்டுள்ள தொழிலர்களில் ஒருவரிடமிருந்து மேலதிக அறிவுரையை நாடுமாறு அவர் உங்களுக்குப் பரிந்துரைக்கக் கூடும்.

## Pharmacists

Pharmacists can give advice and information on eye health and vision care. This includes advice on medications, such as side effects, and how they may react with each other. They can also give information on over-the-counter medications and referral options for common eye problems such as seasonal allergies.

When buying medications, eye drops or reading glasses from your pharmacist, don't forget to explain any eye problems you may have. They may recommend that you seek further advice from one of the professionals listed below.

## பொது மருத்துவர்கள் (GPs)

கண் நலம் மற்றும் பார்வைப் பராமரிப்பு குறித்துத் தகவல்கள் தரவும், உடனடியான மதிப்பீட்டு சோதனை ஒன்றை மேற்கொள்ளவும் பொது மருத்துவர்களால் இயலும். பொதுவான பல கண் பிரச்சினைகளுக்கான சிகிச்சையையும் அவர்களால் பரிந்துரைக்க இயலும்.

## General practitioners (GPs)

GPs can give information on eye health and vision care and carry out an immediate assessment. They can also prescribe treatment for many common eye problems.

Tamil. April 2017.
விக்டோரிய மாநில அரசாங்கத்தின் ஆதரவிற்கு Vision 2020 Australia ஏற்பு அளிக்கிறது
VICTORIA State Government

மேலதிக சிகிச்சைக்காக நீங்கள் பார்வைச் சோதகர் (optometrist) அல்லது கண் மருத்துவர் (ophthalmologist) ஒருவரைப் பார்க்க வேண்டுமா என்றும் உங்களுடைய பொது மருத்துவரால் (GP) மதிப்பீடு செய்ய இயலும்.

Your GP can also assess if you should see an optometrist or ophthalmologist for further treatment.

## பார்வைச் சோதகர்

பார்வைச் சோதகர்கள் கண் நலத் தொழிலர்களாவர். கண்களைச் சோதிக்கவும், பார்வைப் பிரச்சினைகளைக் கண்டுபிடித்து, நோயறிவு செய்து அவற்றை நிர்வகிப்பதற்குமான தகுதி பெற்றவர்களாவர் இவர்கள்.

கண் கணணாடிகள் அல்லது தொடு வில்லைக(contact lenses)ளைப் பரிந்துரைத்து அவற்றைப் பொருத்த இவர்களால் இயலும். உங்களுடைய கண் நலத்தின் பல அம்சங்களைப் பற்றி உங்களுக்கு அறிவுரைக்கவும், அவற்றை நிர்வகிக்கவும் இவர்களால் இயலும்.

ஒவ்வாமைகள், நோய்த்தொற்றுகள் அல்லது கண்ணீர் அழுத்த நோய் (glaucoma) போன்ற பிரச்சனைகளுக்குக் குறிப்பிட்ட இடத்தில் இடக்கூடிய கண் மருந்துகளையும் இவர்களால் பரிந்துரைக்க இயலும்.

பார்வைச் சோதகர் ஒருவரைப் பார்க்க உங்களுக்குப் பரிந்துரை தேவையில்லை.

தேவைப்பட்டால், மேலதிக சோதனைகள், சிகிச்சை அல்லது அறுவைசிகிச்சைக்காகக் கண் மருத்துவர் ஒருவரைப் பார்க்க பார்வைச் சோதகர் உங்களைப் பரிந்துரைப்பார்.

## Optometrists

Optometrists are eye health professionals. They are qualified to examine the eyes and to detect, diagnose and manage vision problems.

They can prescribe and fit glasses or contact lenses. They can advise you on and manage many aspects of your eye health.

They can also prescribe topical eye medications for problems such as allergies, infections or glaucoma.

You don’t need a referral to see an optometrist.

If required, the optometrist will refer you to an ophthalmologist for further tests, treatment or surgery.

## கண் மருத்துவர்கள்

கண் மருத்துவர்கள் மருத்துவம் படித்தவர்களாவர். கண்களுக்கான மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றில் இவர்கள் தனிச்சிறப்புப் பயிற்சியை முடித்துள்ளவர்கள். விழிச் சோதனைகளை மேற்கொண்டு, அனைத்து வகையாக கண் நோய்களையும் அறிந்து அவற்றிற்கான சிகிச்சை மற்றும் கண் அறுவைசிகிச்சை ஆகியவற்றை இவர்கள் மேற்கொள்வர்.

உள்ளூர்ப் பகுதியிலுள்ள தனியார் சேவை, மருத்துவமனையிலுள்ள கண் மருந்தகம் அல்லது பொதுச் சுகாதார மருந்தகம் ஆகியவற்றில் கண் மருத்துவரை நீங்கள் காணலாம்.

## Ophthalmologists

Ophthalmologists are medical doctors. They have completed specialist training in medicine and surgery of the eyes. They carry out eye tests, diagnose and treat all eye diseases and perform eye surgery.

You may see an ophthalmologist in a local private practice, a hospital eye clinic or in a public health clinic.

‘மெடிகெயர்’ (Medicare) தள்ளுபடியைப் பெற பரிந்துரைப்பு ஒன்று தேவை. பரிந்துரைகளைப் பெறுவதில் உங்களது பார்வைச் சோதகர் அல்லது பொது மருத்துவரால் (GP) உதவ இயலும். அவசரமான கண் நோய்நிலைகள் கூடிய விரைவில கவனிக்கப்படுவதையும் இவர்கள் உறுதி செய்வர்.

A referral is required to obtain the Medicare rebate. Your GP or optometrist can assist with referrals. They will also ensure that urgent eye conditions are seen as soon as possible.

## பார்வையற்றோர் அல்லது பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கான சேவைகள்

அறிவுரையாலோசணை சேவைகள், உள்ளூர்ப்பகுதி ஆதரவுதவிக் குழுக்கள் மற்றும் வேலைவாய்ப்பு சேவைகள் ஆகியவற்றையும் சில அமைப்புகள் வழங்கக்கூடும். உங்களுடைய உள்ளூர்ப் பகுதிகளில் கிடைக்கும் சேவைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள உங்களுடைய பார்வைச் சோதகர், கண் மருத்துவர் அல்லது பொது மருத்துவருடன் பேசுங்கள்.இந்த சேவைகளை அணுக உங்களுக்குப் பரிந்துரை தேவையில்லை.

பார்வையற்றோர் அல்லது பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கான ஆதரவுதவிகளும் சேவைகளும் பல உள்ளன.

உங்களது தேவைகளை மதிப்பீடு செய்து, உங்களது அன்றாட அலுவல்களைச் செய்வதற்கான புதிய வழிகளை நீங்கள் கற்றுக்கொள்ள உங்களுடன் இணைவாய்ப பணியாற்ற இவர்களால் இயலும்.

நீங்கள் தொடர்ந்து சுதந்திரமாக செயல்படுவதையும், விரும்பும் காரியங்களில் நீங்கள் ஈடுபடுவதையும் உறுதி செய்வதே இதன் நோக்கமாகும் (GP).

## Services for people who are blind or vision impaired

Many supports and services are available for people who are blind or vision impaired. They can assess your needs and work with you to learn new ways to carry out everyday tasks. This is to make sure you can continue to be independent and take part in your chosen activities.

Some organisations may also provide counselling services, local support groups and employment services.

You don’t need a referral to access these services.

To find out more on the services available in your local area, speak to your optometrist, ophthalmologist or GP.

## மேலதிகத் தகவல்களுக்கு

செல்க: www.visioninitiative.org.au

உங்களுடைய உள்ளூர்ப் பகுதியிலுள்ள பார்வைச் சோதகர் ஒருவரைக் கண்டறிய www.optometry.org.au/victoria எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

உங்களுடைய உள்ளூர்ப் பகுதியிலுள்ள கண்மருத்துவர் ஒருவரைக் கண்டறிய www.ranzco.edu எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**உங்கள் கண் பார்வையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் - பரிசோதனை செய்துகொள்ளுங்கள்**

## For more information

Visit www.visioninitiative.org.au

To find a local optometrist visit www.optometry.org.au/victoria

To find a local ophthalmologist visit www.ranzco.edu

**Save Your Sight - Get Tested**

## தகவல்கள் மற்றும் ஆதரவுதவி சேவைகள்

**Australian College of Optometry** – குறை பார்வை மருந்தகம்: (03) 9349 7400 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.aco.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Blind Citizens Australia**: 1800 033 066 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.bca.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Glaucoma Australia**: 1800 500 880 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.glaucoma.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Guide Dogs Victoria**: (03) 9854 4444 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.guidedogsvictoria.com.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Keratoconus Australia**: 0409 644 811 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.keratoconus.asn.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Macular Disease Foundation Australia**: 1800 111 709 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.mdfoundation.com.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Retina Australia**: 1800 999 870 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.retinaaustralia.com.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Royal Institute for Deaf and Blind Children**: (02) 9871 1233 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.ridbc.org.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**Vision Australia**: 1300 847 466 என்ற இலக்கத்தை அழையுங்கள் அல்லது www.visionaustralia.org எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்

## Information and support services

**Australian College of Optometry**- Low vision clinic: call (03) 9349 7400 or visit www.aco.org.au

**Blind Citizens Australia**: call 1800 033 066 or visit www.bca.org.au

**Glaucoma Australia**: call 1800 500 880 or visit www.glaucoma.org.au

**Guide Dogs Victoria**: call (03) 9854 4444 or visit www.guidedogsvictoria.com.au

**Keratoconus Australia**: call 0409 644 811 or visit www.keratoconus.asn.au

**Macular Disease Foundation Australia**: call 1800 111 709 or visit www.mdfoundation.com.au

**Retina Australia**: call 1800 999 870 or visit www.retinaaustralia.com.au

**Royal Institute for Deaf and Blind Children**: call (02) 9871 1233 or visit www.ridbc.org.au

**Vision Australia**: call 1300 847 466 or visit www.visionaustralia.org